**மஹியங்கனை பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மஹியங்கனை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மஹியங்கனை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பிரதேச வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்காக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,679,867 இற்கான 03 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்த போதிலும், அப் பெறுமதியை நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மற்றும் நிர்மாண வேலை கடன்பட்டோர் என காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி, வாடகை, சேவைக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகியவற்றின் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 70,817,931 தொகை எனினும், நிதி செயற்பாட்டுக் கூற்றில் அது ரூபா 88,571,687 தொகை எனவும் ரூபா 17,753,756 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் மிகை மற்றும் பெற வேண்டியவைகள் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் சரி செய்யப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (இ) | 12 வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையான நீண்ட காலப் பகுதியுள் அறவிடப்பட முடியாதவையாக காணப்பட்ட போதிலும் பெற வேண்டியவைகளில் (Receivable) உட்படுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 495,683 தொகைக்கான 09 நிலுவை ஏனைய வருமானக் கணக்கு மீதிகள் அறவீடு செய்ய முடியாமையினால் முறையான அங்கீகாரம் பெற்று அந்த கணக்கு மீதிகளை திரண்ட நிதியத்திற்கு பதிவழிப்பதற்கு பதிலாக நடைமுறை சொத்துக்கள் என தொடர்ந்தும் | நிலுவை வருமானத்தை பதிவழிப்பதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

காட்டப்பட்டிருந்தமையால் அந்தப் பெறுமதியினால் போலியான சொத்தொன்று நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 37,554,458 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 12,945,374 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹியங்கனை நகரில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணியொன்றில் வாடகைதாரர்களினால் பணம் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 31 கடையறைகளைக் கொண்ட வர்த்தக தொடர் கட்டிடம் 2012 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான 09 ஆண்டுகள் காலப் பகுதி பல்வேறு தரப்பினரால் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், சபை வாடகை தாரர்களுடன் உடன்படிக்கைகளுக்கு அணுகி வாடகையை அறவீடு செய்திருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. | வாடகைதாரர்களுடன் உடன்படிக்கைகளுக்கு அணுகி நிலுவை வாடகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 114 அரச நிறுவனங்களுக்கான வீதவரி அலகுகளில் இருந்து மற்றும் 1966 தனியார் மற்றும் ஏனைய வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட்டிருக்காத வீதவரி ரூபா 3,227,877 தொகை தொடர்பாக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தவை 06 மாதங்கள் தாமதிப்பதற்காக சபை அங்கீகாரம் கிடைத்திருந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 2000 ஆண்டு முதல் காணப்படும் சபையினால் வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த ஆதனங்கள் தொடர்பான சந்தை வாடகை, இறைச்சிக் கடை, மீன் கடை மற்றும் பொது கழிவறை நிலுவை வாடகை ரூபா | அறவீடு செய்வதற்காக முன் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

1,919,224 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

### 3. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

#### சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் வருடாந்தம் அதிகார பிரதேசத்தில் சேகரமாகும் சுமார் 800 தொன் குப்பைகள் குவிப்பதற்கான மஹியங்கனை பதுளை பிரதான பாதையில் மஹாவலி கங்கைக்கு அண்மித்த இடத்தில் குப்பைகளை முறையற்ற விதமாக அகற்றப்படுவதுடன், மீளாய்வாண்டின் போது குப்பைகளை அகற்றுவதற்காக சுமார் ரூபா 4,439,063 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இதற்காக சபையினால் 25 ஊழியர்கள், 05 டிரக்டர் வண்டிகள் மற்றும் லொறி வண்டியொன்றும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மஹியங்கன தெஹிகொல்ல கிராமத்தில் 05 ஏக்கர் காணி ஒன்று ஒதுக்கப்பட்டு ரூபா 16,203,454 தொகை செலவிடப்பட்டு நிரந்தர குப்பை செயற்களமொன்று, அலுவலகக் கட்டிடம் ஒன்று மற்றும் கட்டிடங்களுக்கு தேவையான மின்சார தொடர்பு பெறப்பட்டிருந்த போதிலும், பிரதேசவாசிகளின் எதிர்ப்பின் காரணமாக செயற்களத்தை பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்படுவதுடன், சுமார் 06 வருடங்கள் குப்பை மீள்சுழற்சி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நீண்டு காலமாக அகற்றப்படும் சாக்கடை கழிவுப் பொருட்களை இடுவதற்காக மஹாவலி கங்கைக்கு அண்மித்து கிடங்கொண்டு தோண்டப்பட்டு போடப்படுவதனால் நீர் மூலவலங்கள் அசுத்தமடைவதுடன், குப்பை அகற்றுவதில் முறையான திட்டமொன்று காணப்படவில்லை. | ஒதுக்கப்பட்ட குப்பை செயற்களத்தில் குப்பைகளை இடுவது தொடர்பாக பிரதேசவாசிகளின் பாரிய எதிர்ப்பொன்று காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. | குப்பைகள் உரிய முறையில் இடப்பட வேண்டும். |